// பிரஜானுகூலன். //

பருவம் 1. | 1905௵ மார்ச்சு-௴ | இலக்கம் 12.

## நமது பத்திரிகை.

அன்பார்ந்த நண்பர்காள்!

உங்கள் ஆசிர்வாதத்தால் நமது பிரஜானுகூலனுக்கு இம்மாதத்துடன் ஓராண்டு நிறம்பியது. சென்ற பதினொன்று மாதங்களிலும் யாதொரு தடையுமின்றி நடை பெற்றிலங்கச் செய்த பரமகருணாஸாகரரான கடவுளைப் பலவாறு ஸ்தோத்தரித்து இதை ஆதரித்து வந்த அன்பர்களனைவருக்கும் நமது ஹிருதயபூர்வ விநய வந்தனத்தைச் செலுத்தி மிகுந்த நன்றி பாராட்டுகின்றோம். உலகத்திற்கு உபகாரமாயிருக்கவேண்டுமென்னுங் கருத்துடனே இப்பத்திரிகையைப் பிரகடனஞ் செய்யத் தொடங்கியதற்கேற்றவாறு நமது பத்திரிகை பலவிதத்திலும் பயன்படத் தக்கதாயிருக்கின்றதென்றும், அனுகூலன் பிரஜானுகூலனாகவே விளங்கி வருகின்றானென்றும் பலவாறு ஸ்லாகித்து நம் நேயர்கள் விடுத்த கடிதங்களையும் நம் சகோதர பத்திராதிபர்களும் பண்டிதர்களும் அளித்த நற்சாக்ஷிகளையும் கண்டுப் பெரிதும் மகிழ்கின்றோம். நமது பிரஜானுகூலன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அநேகவிஷயங்கள் தேசாபிமானி, நாகை நீலலோசனி, முஸ்லிம் அபிமானி முதலிய பல தமிழ்ப் பத்திரிகைகளிலும் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. நமது ஆப்த மித்திரரான மகா-ரா-ரா-ஸ்ரீ T. பக்தவத்ஸலம் பிள்ளை B. A. அவர்களும் மகா-ரா-ரா-ஸ்ரீ இராமனாத ஐயர் B. A. அவர்களும் இன்னும் பலரும் நமது அனுகூலனுக்கு இதின் இரண்டாவது வருடமுதல் விஷயதானம் செய்ய முன் வந்துளார். அத்துடன் நாமும் அநேக அரிய விஷயங்களைப் பிரதி தடவையும் எழுதி வருவதாய் நிச்சயித்திருப்பதுபோலவே நமது பத்திரிகையின் உதவிப் பத்திராசிரியரும், அஸிஸ்டெண்டு எடிடரும், மற்றுமுள்ள நிரூப சிரேஷ்டர்களும், தீர்மானித்திருப்பதால் பிரஜானுகூலன் தனது இரண்டாவது வயதின் ஆரம்பத்திலிருந்து அதியுன்னதமாய் ஜ்வலிப்பானென்பதை மிகுந்த பிரியத்துடன் தெரிவிக்கின்றோம். அனுகூலனை 2-வது வருடமுதல் பல சீர்திருத்தங்களுடன் வெளியிடப்படும். ஆகலான் இப்பிரதம ஸம்வத்ஸரத்தில் நமது அனுகூலனை ஆதரித்து வந்ததைப்போலவே இனிமேலும் ஆதரித்துவருமாறு நமது கையொப்ப நேயர்களைப் பெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றோம். இப்பத்திரிகையைப் பிரதமத்தில் பிரகடனஞ் செய்யும்பொழுது சந்தாதா

ரர்கள் சிலரே இருந்தனர். இப்பொழுதுதான் நாளடைவில் அதிகப்பட்டு வருகின்றனர். இவ்வருடம் நமக்கு நேர்ந்த பல அசந்தர்ப்பங்களாலும், சரீர அசௌக்கியத்தாலும் சிற்சில தருணங்களில் பத்திரிகையைக் காலந் தாழ்த்து வெளியிடும்படி நேரிட்டது. இனி அங்ஙனம் தவறுவதற்கு இடமின்றி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றோம். நமது பத்திரிகையின் முதல் வருஷத்திய 12 சஞ்சிகைகளையும் ஒன்றாகச் சேர்த்து புத்தக ரூபமாகப் பயிண்டு செய்துகொண்டால் எக்காலத்திலும் எவர்களுக்கும் உபயோகப் படத்தக்க ஓர் அரிய பெரிய ஸத் கிரந்தமாகும்.

பிரதமத்தில் நினைத்திருந்தபடி வாரப் பத்திரிகையாகப் பிரகடனஞ் செய்யப் போதுமான சந்தாதாரர்கள் சேராதகுறைவால் முடியாதுபோயின வெனினும் அவற்றை அம்மட்டில் விட்டுவிடாது நம்மாலியன்றனவும் முயற்சித்தும் அவ்விஷயத்தில் போதுமான கவனத்தைச் செலுத்தியும் வருகின்றோம். கருணாகரக் கடவுளின் பேரருளால் அது முற்றுப் பெறின் இவ்வருடத்திலேயே நமது அனுகூலன் மாத மிருமுறை யாக வெளிப் போந்துலாவி அனைவருக்கும் அத்யந்தமகிழ்வை யளிக்கத்தக்கனவாய் ஜ்வலிக்கக்கூடும். சென்ற வருடத்தில் 3 இனாம் அளிப்பதாய்ப் பிரகடனஞ் செய்திருந்தோம். அவற்றில் அத்தியாவஸியகரபூஷணம் ஏட்டுப் பிரதியா யிருக்கும் போழ்தே கைதவறி விட்ட தாகலான் அஃது ஒன்றுபோக மற்ற இரண்டில் ஜெயவிஜயன் புத்தகத்தை முதலிலேயே அனுப்பிவிட்டோம். இனி நம்மால் தரப்படவேண்டிய காலண்டரை இவ்வருடத்தில் சந்தாதாரர்கட்கு இனாமாய் கொடுக்கப் போகும் ஹிருதயானந்தினி எனும் அத்யத்புத புத்தகத்துடன் சேர்த்து அனுப்புவதாய் நிச்சயித்திருப்பதுமன்றி தவறிவிட்ட "அத்யாவஸியகரபூஷண"த்திற்குப் பதிலாக இனி வெளியிடப் போகும் புத்தகங்களுள் ஒன்றையும் அளிப்பதாய் உத்தேசித்திருப்பதால் நமது சந்தாதாரர்கள் இதனால் திருப்தியடைவார்களென்று நம்புகின்றோம். இவ்வருடத்தில் கன்னட பாஷையினின்றும் மொழி பெயர்த்து அநேக கதைப் புத்தகங்களை வெளியிட நிச்சயித்திருப்பதைப்பற்றி விரிவாக மற்றோரிடத்தில் எடுத்துக் காட்டியிருக்கின்றோம். அப்புத்தகங்கள் இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டும் பாதி விலைக்குக் கிடைக்கும். இவ்வருடத்தில் இப்படிப் பலவிதத்திலும் பிரயோஜனங்களை யடையத் தக்கதாயிருப்பதால் நமது ஆப்தமித்திர ரத்தினங்களான அனைவரும் நம்மால் பிரசுரிக்கப்பட்டு வரும் பிரஜானுகூலன் பத்திரிகை விஷயத்தில் அன்பு செலுத்தி இவ்விடமிருந்து அனுப்பப்படும் V.P.P. பாக்கெட்டுகளைக் காலதாமதமின்றி உடனே பெற்று நமது முயற்சியை முன்னுக்குக்கொண்டுவந்து அனுகூலனை யாதரித்து ஹிருதயானந்தினி யை யடைந்து இன்புறக் கோருகின்றோம்.

பத்திராதிபர்.

## சரித்திரப் பயிற்சி.

(முன் தொடர்ச்சி.)

இங்கிலாந்து தேசத்து உத்தமகவிகளுக்குள் ஒருவரென்று சொல்லக்கூடிய ஷெல்லி என்னும் ஒரு மகாவித்வான் சரித்திரப்பயிர்ச்சியைப் பற்றி பின்வருமாறு சொல்லுகிறார். "முன்காலத்து விருத்தாந்தங்களை நானறி

வேன். அவ்வறிவை நான் நன்னெறியிற்செலுத்துவதற்கு ஒருதவியாகச் செய்து கொள்வேன். இப்படி நானடையும் தெள்ளறிவினாலே என் குற்றங்களெவை, இதற்கு முன்னா லென்னிடத்திலிருந்த அறியாமை யாது என்றுஆராய்ந்து சுகமடையக்கடவேன்." இக்கவியின் இம்மெய்யானகருத்திற்கிசைய பூர்வகாலத்துக் கிரேக்கர் ரோமர், பாரசீகர்,அரேபியர்,முதலிய ஜாதியார்கள் சரித்திர ஆராய்ச்சி புத்தியைத்தெளிவாக்குகிற தென்பதை யறிந்து சரித்திரவிஷயமான கெத்திய காவியங்களை மிகுந்த ஆதரவுடன் விருத்தி செய்தார்களென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். நம்மவர்களோவென்றால், அவ்வாறு சரித்திர ஆராய்ச்சி செய்யாததினால் ஸ்வாதீன மற்றவர்களாய் தங்கள் நாட்டின் நன்மையின் பொருட்டு முயற்சி செய்யாமல் ராஜ்யாதிகாரத்திலும் விருத்தியடைய முடியாமலுமிருக்கின்றார்களென்பது யாருக்குத்தான் தெரியாது? எந்த நாடுகளாயினும் அவைகளின் வாழ்விற்கும் கேட்டிற்கும் காரணம் சரித்திர ஆராய்ச்சியினால் தான் அறியக்கூடும். முற்காலத்து வித்வான்கள் எளிய வாசக நடையில் நூல்கள் ஒன்றும் செய்யாமல் உத்திரேகமுள்ள கவிரூபமான இதிகாச புராண மகாகாவியம் முதலானவைகளால் நடந்த விருத்தாந்தங்களை ஒருவாறு வர்ணித்தார்கள். ஆகையால், எளிய நடையில் எழுதப்பட்டமுழுதும் நம்பத்தக்க சரித்திரநூல்கள் இப்பரதகண்டத்தில் இல்லை. நம்முடைய துர்ப்பாக்கிய வசத்தால் நம்முன்னோர்களின் பெருமையையும் திறமையையும் பற்றிய மெய்யான விவரங்களை நாம் வாசிக்கக் கொடுத்துவைக்காமற்போனோம். நம்மவர்களுக்குள் இக்காரணத்தினால்தான் தேசாபிமானம் விருத்தி யடையவில்லை. "உண்மையின் பொருட்டும் தேசக்ஷேமத்தின் பொருட்டும் ஒருவன் மரணமடைவது இனிது"என்று ஆங்கிலேயர்கள் சொல்லுகிறார்கள். கீர்த்திமான்களாகிய மனுமாந்தாதா, விக்கிரமார்க்கன், சாலிவாகனன், முதலான நம் நாட்டு முன்னரசர்களின் சரித்திரங்களில் மெய்யான விவரங்களை நம்மில் நன்றாக உணர்ந்தவர் யாவர்? அப்படி யறிந்திருந்தால் நேற்றையவரைக்கும் நாகரீகமற்றிருந்த அங்கிலேயர்கள் இக்காலத்து நம்மவர்களை வென்றிருப்பார்களா? அமெரிக்கர், அங்கிலேயர் முதலியவர்கள் முன்னாளில் நடந்த சங்கதிகளையும், இப்போது நடந்துகொண்டிருக்கும் வர்த்தமானங்களையும் காலக்கிரமமான சரித்திரமாக எழுதிவிடுகிறார்கள். நம்மவர்களோ, அந்தந்த காலத்தில் நடக்கும் சங்கதிகளில் கவிச்சுவை உணரும் தன்மை உடையவர்களுக்குச் சந்தோஷந் தரத்தக்கவைகளையும் அலங்காரமாக எடுத்து வர்ணிக்கத்தக்கவைகளையும் வைத்துக்கொண்டு மற்றதை மறந்து விடுகிறார்கள். இதனால் காவியம் பண்ணக்கூடாதென்பது நமது கொள்கை அல்ல. ஆனால் சரித்திரம் செய்வதையும் மறக்கக்கூடா தென்பதே நமது முக்கிய கருத்து. நமது அரசன் எப்படிப்பட்டவன்? நமது நிலமை எத்தகையதானது? அரசாக்ஷி நியாயமாய் நடந்து வருகிறதா? இல்லையா? என்று கிராமாந்திரங்களில் பண்டிதர்கள் நன்றாக அறிகிறதில்லை. மடாதிபதிகளும் அறிகிறதில்லை. ஆதலால்தான் அவர்களுக்குச் சுதேசக்ஷேமத்தில்நாட்டமில்லை; உபந்நியாசங்களில்கவனமில்லை. சோமயாகாதிகிருதுக்கள் செய்யுங்காலத்தில் அனேகம் பண்டிதர்கள் சாஸ்திர விஷயங்களைப்பற்றிப்பிரசங்கம் செய்வதைப்பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். அப்பொழுது சரித்திராத்தியயனத்தினால் ஞானமுள்ளபண்டிதர்கள் தேசக்ஷேமம், மதாபிமானம், ராஜ்யநிர்வாகம் முதலிய விஷயங்களைப்பற்றிச்

சபையிலுள்ளோர் ஹிருதயத்தை உருக்கத்தக்க வார்த்தைகளினால் உபந்நியாசங்கள் செய்தால் மிகுந்த நன்மையுண்டாகும். இப்படிப்பட்ட தேசோபகாரமான விஷயங்களுக்குச் சரித்திரமே முதற்காரணமென்று ஆலோசித்து யாம் சிற்றறிவுள்ளோமாயினும், இப்பத்திரிகையின் மூலமாக "சரித்திரப்பயிற்சியை" சுருக்கமாக எழுதஉத்தேசித்து இறகேந்தலானோம்.

(இன்னும் வரும்)

T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

# டங்டிங் ரமாமணி.

(முன் தொடர்ச்சி.)

இதற்குள் டங்டிங்ரமாமணி யென்பவள் பிரவடையடைந்து தனது பிராணநாதரை எப்போது பார்ப்போம் என்ற மனோவியாகூலத்தினால் தினசரி நதிக்குச்சென்று நீராடி அங்குள்ள ஓர் விநாயகருக்கு பூஜை முடித்துக் கொண்டு வருகிற வழக்கம்போல் அன்றைய தினமும் ஆற்றங்கரைக்குச் செல்லுங்கால், மந்திரிகுமாரனை விட்டுப்பிரிந்து தனியே மாடியின்மீது உலாத்திக்கொண்டிருந்த அரசகுமாரன் அவ்வடிவழகியை வெகுதூரம் தன் கண்ணுக்கு மறைகிற வரையில் இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்து பிறகு சும்மாயிருந்து விட்டான். வெளியே சென்றிருந்த மந்திரிகுமாரன் வந்து இராஜகுமாரன் மனம் வேறுபட்டிருப்பதையறிந்து அவனருகில் சென்று தினம்போலில்லாமல் இன்று ஒரு மாதிரியா யிருக்கக் காரணம் யாதுயென்றும், அவ்வித வேறு பாட்டிற்குள்ள குறைகள் எவ்விதமாயினும் தீர்த்துக் கொடுக்க சித்தமாயிருக்கின்றேனென்றும் வற்புறுத்திக் கேட்கலாயினன். அச்சமயத்தில் மந்திரி குமாரனைப் பார்த்து இராஜகுமாரன் "உன்னுடன் சொல்லாத வார்த்தைகளும் உண்டா கேள். பூர்ணசந்திரனை நிகர்த்த முகவிலாசமும், மூன்றும் பிறையினைப் பழித்த புருவ விலாசமும், எள்ளிளம்பூவையும் சண்பகப் பூவையும் பழித்த நாசியினையும், கண்ணாடியை இகழ்ந்த கன்னத்தையும், வள்ளக்கொடியோன் காதினையும், வலம்புரிச் சங்கத்தை நிகர்த்த கண்டத்தினையும், நீலோத்பலத்தைப்பின்னிடச்செய்யும் கண்களையும், கரியமணலோ கொடிய பாசியோ கரிய மேகமோ மைக்கொத்தோ யுகாந்த காலயிருளோவென்று சந்தேகிக்கும்படியான அழகியகூந்தலையும், அகன்ற மார்பினையும், அன்னரேகை அரசரேகை கிளிரேகை மயில்ரேகை குயில்ரேகை புஷ்பரேகை முதலிய சிங்காரங்களைச் செய்யக்கூடிய கவிந்து குவிந்து திரண்டு உருண்டு நிமிர்ந்து அண்ணாந்து இருமாந்து புடைத்து பூரித்து சிறுத்து பருத்து அரும்பி வெதும்பி நெருங்கி வெகு பளபளப்பாய் யானையது மத்தகமோ புஷ்பச்செண்டோவென்றையுறும்படியான கனகஸ்தனங்களையும், ஆலிலைபோன்ற வயிற்றினையும், நீர்சுழி போன்ற நாபியினையும், அன்னாபிக்கமலமுதல் ஸ்தனபரியந்தமுள்ள சிறு ரோமரேகையினையும், மல்லிகைப்புஷ்பம் போன்ற கைகளையும், மருள் பிஞ்சுபோன்ற விரல்களையும், வாழைமரமோ யானை துதிக்கையோவென்று ஊகிக்கும்படியான அழகிய தொடையினையும், ஞண்டைப்பழித்த முழங்காலினையும், ஆமையையொத்த புறங்காலினையுமுடைய கன்னிகைமானொன்று என் கண்ணெதிர்ப்பட்டு மனதைக் கவர்ந்துகொண்டு போயினள். அவள் யாரோ எங்குறைபவளோ அவள் மணவாளனெவனோ? அவ

ளைக் கண்டது முதல் என்னுயிர் என்னிடத்திலில்லை. இதற்கு என்னசெய்வது என்று ஜயசிங்மன்னன் சொன்னதைக்கேட்டு, மந்திரிகுமாரன் அவளை என் கண்ணெதிரில் ஒருதடவை காண்பித்தால் போதும், அவள் எப்பேர்ப்பட்டவளானாலும் சரி, அவ்வணங்கைத் தம்மிடம் சேர்ப்பிக்க நானாயிற்று என்றுகூறி, ஸ்நானபானாதிகள் செய்யச்சொல்லி உண்டு சுகித்திருந்தார்கள். மறுநாட்சாலையில் இருவரும் மாடியின்மீது நின்றிருக்கையிலேயே அச்சுந்தரியானவள் வழக்கம்போல் குடத்துடன் ஆற்றங்கரைக்குச்சென்றாள். அதைப்பார்த்து அரசகுமாரன் இவள்தான் நான் சொன்ன ரமணீ! என்னநடை! என்னஉடை! என்னஒய்யாரம்! என்ன அழகு! என்ன சொகுசு! யாதொரு ஆபரணமுமில்லாமலே இவ்வளவு வடிவழகேற்பட வேண்டுமானால் நல்ல பூஷணங்களமைந்திருந்தால் எப்படியிருக்கவேண்டாம், என்றுசொன்னான். மந்திரிகுமாரன் தாங்கள் இங்கேயே இருங்கள் நான் போய் பார்த்து வருகிறேன் என்று சொல்லிமாடியினின்றும் கீழிறங்கி அவள்பின்தொடர்ந்து சென்றான். இராசகுமாரன் இங்கே ஏக்கம் கொண்டிருந்தான்.

(முதல் அத்தியாயம் முற்றிற்று.)

☞ இதன் மறுசஞ்சிகையில் இரண்டாவது அத்தியாயத்தை மூடிக்க நண்பர்களைக் கோருகின்றோம்.

டி. வி. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

# காமியஞ் செய்து காலங் கழியாதே.

இவ்வுலகின் கண் நாம் புரியும் கருமங்கள் இருவகைத்தாம். அவைகள் காமியமும், நிஷ்காமியமுமேயாம். காமியமென்றால் பலனை உத்தேசித்துச் செய்யுங் கருமம். பலனை உத்தேசியாது செய்யுங் கருமமென மற்றது பொருள் கொள்ளும். காமிய தருமத்தைக் காட்டிலும் நிஷ்காமிய கருமமே சிலாக்கிய மெனப் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, நமதுசொந்த அனுபவத்திலும் தெரிகின்றது.

பயனை உத்தேசித்துப் புரியுஞ் செய்கை நினைத்த வண்ணம் பலனைக் கொடுக்கத் தவறினால் நாம் மனத் துயரடைகின்றோம். இவ்வண்ணம் அநேக விஷயங்கள் நேரிடின் மனத்துயருடன் நமது தேகமும் கெட்டுச் சீர் குலைகின்றது. ஒவ்வொரு பொருளிடத்தும் வெறுப்படைகிறோம். சந்தோஷம் குன்றுகிறது. விசன மேலிடுகிறது. மனிதர்கள் கூட்டமே விஷமென நினைக்க ஏதுவாகிறது. அவர்களும் நம்மைக்கண்டு வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். இவ்வுலகின் கண் பிறந்தும் பிறவாதவர்களாக நாம் ஆகின்றோம். எல்லோரும் மெச்சும் வண்ணம் நடப்பதே பிறவிப் பயனாகும்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று”

பலனை உத்தேசியாது புரியும் காரியங்களோ அவ்வண்ணமில்லை. அக்காரியங்கள் கைகூடாது போனாலும் நாம் விசனத்துக் குள்ளாவதில்லை.

“காமியஞ் செய்து காலங் கழியாதே” என்றார் திருநாவுக்கரசு நாயனார். “கருமத்தில் பலாபேட்சையை விட்டிருக்கிறவன், ஆத்ம நிஷ்டையினால் பெறத் தகுந்த மோட்சத்தை அடைகிறான். ஆசையினாலேவப்

பெற்று பலனில் இச்சையை வைத்து கருமத்தைச் செய்கின்றவன் பந்தத்தில் கட்டுப் படுகின்றான்." என்று பகவத்கீதையிலும் சொல்லப் பட்டுளது. ஆகையால், நாம் பலனைக் கருதாது செய்யும் செய்கைகளே மேன்மை பொருந்தியது. மேலும் உற்று நோக்குவோம். பலனைக் கருதாது கடவுளின்பேரில் பாரத்தைவகித்து, கருமங்களைச் செய்யப்புகின் அவைகள் கைகூடுமென்பதற்குச் சற்றேனு மையமில்லை. "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்ற வாக்கியம் யாவரு மறிந்ததே. பலனை உன்னிச் செய்யப் புகுங் கருமங்கள் கை கூடுவது அருமையாகின்றது. குழந்தைப் பருவத்தை உல்லாசப்படுத்திய விளையாடல்களையே இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்வோம். "நமது எதிராளியைத் தோற்கடிக்க வேண்டுமென்று" வெண்ண வெண்ண நாமே தோல்வியடைகின்றோம்.

ஆசை யில்லாது நாம் கருமங்களைப் புரியின், பந்தங்களை நீக்கியவர்களாவோம். பற்றைத் துறந்தவர்களாவோம். மோட்சத்தை யெய்தியவர்களாவோம். "அற்றது பற்றெனில் உற்றதுவீடு." "பயனைக் கருதாது கருமம் செய்யின் மோட்சமடையலாம்" என்று எண்ணி பயன் கருதாது காரியங்களைப் புரியினும் பிரயோஜனமில்லை. மோட்சமாகிய பயனை எண்ணிக் கருமத்தைப் புரிந்தவர்களாகின்றோம்.

மேற்கூறிய இருவகுப்பினர்களுக்கு முள்ள வித்தியாசத்தை மறுமுறை கூறி முடிக்கின்றேன். பயன் கருதாது கருமம் புரிபவர்களை ஞானிகளெனக் கூறலாம். இன்ப சுகங்களைக் கவனியார்கள். கஷ்ட துக்கங்களைக் கருதார்கள். "நடந்தாலு மிருந்தாலு நயின்றாலுந் துயில் கொண்டு கிடந்தாலும் விழுந்தாலுங் கிளர் முடி மன்னவர் முதலோர் தொடர்ந்தாலுந் தொழுதாலுந் துதித்தாலு மவமதித்துக் கடந்தாலு மெய்ஞ்ஞானி கமலவிலைப் புனல்போல்வான்". மற்றவர்கள் விஷயம் அப்படியல்ல. மனம் வருந்தி துக்க சாகரத்தில் மூழ்கியவர்களாகவே யிருப்பார்கள்.

இவ்வுலகின் கண் நாம் துன்பங்களாலேயே சூழப் பெற்றிருக்கின்றோம். அத்துன்பங்களை நீக்க வழியறியாது மயங்கி யிருக்குஞ் சமயத்தில் நாம் புண்ய கருமங்களைப் புரியினும் புரியலாம். ஆகையால் பயனைக் கருதாது எல்லாக் கருமங்களையும் ஈஸ்வரார்ப்பணமாகச் செய்வதே சிலாக்கியமாகும். தாமரை இலை எப்படி ஜலத்தால் ஒட்டப் படுகின்ற தில்லையோ அவ்வண்ணம் அவன் புண்ய பாவங்களால் ஒட்டப்படுகின்றதில்லை. "வேண்டி வினை செயேல்" என்று ஔவை கூறியுள்ள மொழியும் இங்கு கவனிக்கத் தக்கது.

S. N. மீனாக்ஷியம்மாள்.

# நல்லுரை.

1. பக்தர்களுடைய சரித்திரமானது நாம் நம்முடைய ஆயுள் காலத்தை மாக்ஷிமையான உன்னத ஸ்தானத்திற்குக் கொண்டு வரக்கூடுமென்பதை நினைப்பூட்டுகின்றது. 2. அறிவிற்கு மேம்பட்டது ஒன்றுமில்லை. ஆனால் அந்த அறிவைக் கல்வியினாலல்லது யடைய முடியாது. ஏனெனில் கல்வியே அறிவின் தாய். இம்மை, மறுமைப் பாக்கியங்களெல்லாம் கல்வியினால் தான் அடையலாம். கல்வி தான் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் பயக்கும். இப்

பேர்ப்பட்ட கல்வியை பெண்கட்குக் கற்றுக் கொடுக்கக் கூடாதெனக் கூறும் மந்த மதிகளின் அறிவீனத்தை என்னென்போம். 3. நெருப்பிடை படாத ஸுவர்ணமும், சாணையில் கருக்கிடப் படாத வைரமும் எங்ஙனம் மேன்மையடையாதோ அதுபோல் சிறு பிராயத்தில் சோம்பலை மேற்கொண்டு திரிபவர்கள் ஒருக்காலும் சிறப்படையார். 4. உலகில் மானிட வாழ்க்கைக்கு விவாகம் அத்தியாவஸ்யமானது. இம்மையில் கற்பிற் சிறந்தோர் உத்தமகன்னிகையை மணம்புரிந்து இல்லறத்திற்குரிய தர்ம நெறிகளில் தவறாது கிருகஸ்தாசிரமத்திலிருந்து பின்பு தான் வானப்பிரஸ்தம் அடையவேண்டும் (5) சப்தத்தால் மானும், பரிசத்தால் யானையும், ரூபத்தால் விட்டிலும், ரசத்தால் மீனும், கந்தத்தால் வண்டும், ஒவ்வொரு புலன்களாலே மரண மடைவதால் இந்த ஐந்து விஷயங்களும் கூடி ஒருருவாய் அமைந்துள்ள மாதர்களது வலையில் பட்டு விடுவித்துக் கொள்வது மிகவும் கஷ்ட சாத்தியமே (6) விவாகத்தால் விஷயாந்தரமும், விஷயாந்தரத்தால் மக்கட்பேறும் மக்கட் பேற்றால் பலவித கவலைகளும் உண்டாகும். பிறகு அவற்றால் பகவானிடம் நமக்குப் பக்தி குறையும். பக்தி குறைந்தால் பின் சாயுஜ்ஜிய பதவி கிடைக்காது. முக்தியடையாத மனிதர் பிறந்தென்ன, இறந்தென்ன? ஆகலான் இங்ஙனம் நேரிடாதபடி ஒவ்வொருவரும் ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். (7) விஷயங்களென்னும் தேள்களும், இந்திரியங்களென்னும் சர்ப்பங்களும், காமக்குரோத மென்னும் புலிகளும், எண்ணங்களென்னும் குரங்குகளும், அகங்கார மென்னும் யானைகளும், மமகார மென்னும் முட்பன்றிகளும், இச்சை யென்னும் கோனாய்களும், அஞ்ஞான இச்சையென்னும் இருள் கூட்டங்களும், சூழ்ந்ததேகம் என்னும் காட்டில் அகப்பட்டுக் கொண்டு தப்பிப்போக வழியில்லாமல் கஷ்டப்படுவதும் கடவுளுடைய சோதனையாலென்றுதான் சொல்லவேண்டும். (8) ஸத்கருமத்தால் பக்தியும், பக்தியால் வைராக்கியமும், வைராக்கியத்தால் ஞானமும், ஞானத்தால் மோக்ஷமும் அடையக் கூடும். (9) பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனமேகாரணமாயிருக்கின்றது. அப்படியே பந்தத்தால் இச்சையும், இச்சையால் ஜனனமரண துக்கமும் உண்டாவதற்கு ஹேதுவாகின்றது. ஆசையால் எந்த விஷயங்களிலும் பேதாபேதத்தை முற்றிலும் நீக்கி சற்குருவை யடைந்து குருகடாக்ஷம் பெற்று நிஷ்காம்மியத்தை யடுத்து உலகில் சகல பொருள்களையும் சமமாகப் பாவித்து ஆத்ம ஞானமுற்று பரமசாம்பிராஜ்ய பதவியை படைவதே மோக்ஷவீடென்னப்படும்.

## பக்தி யோகம்.

"பக்தி செய்தால் முக்தி கிட்டும்" என்னும் வேதவாக்கியத்திற்கிணங்க, நாமெல்லோரும் பக்தி செய்ய வேண்டியது அத்தியாவசிகமாயிருக்கிறது. மனுஷகோடிகளாகிய நாமெல்லோரும் இப்போதிருக்கும் நிலைமையானது, நாம் முற்பிறப்பில் செய்துள்ள கர்மங்களால் உண்டானது. மறுபிறப்பில் நாம் அடையும் நிலைமையானது, இப்போது திரிகரணங்களாகிய மனம், வாக்கு, காயம், ஆகியவற்றால் செய்யும் கருமங்களாலான தென்பது நிச்சயம். சிலருக்கு வெளியிலிருந்து கிடைக்கும் உதவியினால் ஆத்மஞானம் சீக்கிரமா யுண்டாகி அதனால் அவர்கள் முக்தியடைகிறதுண்டு. இவ்விதமான அதிதீவிரபக்குவம் புஸ்தகங்க

ளைப்படிப்பதினா லுண்டாகாது. அப்படி படிக்கிறதினால் மகா மேதாவிகளாகலாம். கடைசியாக நம்முடைய மனம் பக்குவமடையாமற் போய்விடும். புஸ்தகங்களைப் படிப்பதினால், நம்முடைய புத்தி விசாலப்படுமே யன்றி ஆத்மஞானம் உண்டாகாது. இதனாலன்றோ அனேக புராணிகர்களும், பாகவதர்களும், தத்துவமுணர்ந்தவர்களும் பிறருக்கு உபதேசம் செய்வதுபோல் தாங்க ளனுஷ்டிக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆதலின் நாம் ஆத்மஞானத்தை, சீக்கிரமாக அடைவதற்கு ஓர் குருவை ஆதரிக்கவேண்டும். எவன் ஆத்மவிசாரணை செய்யத்தொடங்குகிறானோ அவனுக்கு நிச்சயமாக ஓர் ஆசாரியர் கிடைப்பார். "பள்ள மிருக்கு மிடத்தில் தண்ணீர் தங்கும்" என்னும் பழமொழி போல், ஆத்ம விசாரணை செய்ய ஆசைப்படுவோனிடம் ஆசாரியன் தாமே சென்று போதிக்கத் தொடங்குவார். ஆசாரியர்களிலும், சிலர் கள்ள வேடந்தரித்து தங்களுக்கு அதிகமாய்த் தெரியுமென்று பாவனை காட்டி, சிஷ்யர்களுக்கு உபயோகமற்ற விஷயங்களைப் புகட்டி, அவர்களைக் கடைசியில் அநாதையாக்குகின்றனர். ஆகையால் ஒவ்வொருவனும் தனக்குத் தக்க நல்ல ஆசாரியனை யடைய வேண்டியது. நல்ல ஆசாரியன் இன்னா னென்று நாம் அறிந்து கொள்வ தெப்படி? கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுவதில்லை. பகலில் பிரயாணம் செய்வதற்கு தீவட்டியின் வெளிச்சம் வேண்டியதேன்? உலகத்துக்கெல்லாம் உபதேசிக்க வல்ல ஆசாரியன் வந்தவுடனே ஆத்மா அவனைத் தானே அறிந்து கொள்ளுகிறது. ஆனால் ஆசாரியனுக்கு மூவகை லக்ஷணங்கள் அத்யாவசியம் இருக்க வேண்டும். அவை, சாந்தம், ஞானம், ஊக்கம் என்பவை. அசுத்தமான ஹிருதய முடையவன், ஒருபோதும் ஆசாரியனாகமாட்டான். ஆசாரியனுக்கு மனோவாக்குகாயங்களாகிய திரிகரணங்களிலும் சுத்தம் வேண்டும். சில ஆசாரியர்கள் பாஷையில் நல்ல விற்பன்னர்களாய் வேதவாக்கியங்களி லுள்ள, ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று மைல் நீளம் அர்த்தம் சொல்லி தங்கடங்கள் சாமார்த்தியத்தை விளக்குகிறார்களே யன்றி உண்மையான ஞானத்தை அடைய வேண்டிய விஷயங்களை உபயோகிக்கிறதில்லை.

(இன்னும் வரும்.)

K. S. செல்லமய்யர்.

# ஞானாம்பாள்.

## முதலாவது அத்தியாயம். கொள்ளைக்காரர் கூட்டம்.

"கொற்றவெண்குடை யெனக் குளிர் வெண்டிங்கள்" நிர்மலமான விசும்பின்கண் மேனோக்கிச் செல்லா நின்றான். அக்காலை மணி சுமார் பதினொன்றரை யிருக்கலாம். வெண்மதி தன் தண்கதிர்களைப் பரப்பிய விடம் ஓர் சிறு குன்றம். அதனின்று ஓர் நீர் வீழருவியானது மிகுந்த சப்தத்துடன் வீழ்ந்து கொண்டிருந்தது. திங்களின் இங்கித வொளியால், அந்நன்னீரானது வெள்ளிப்பாளங்களைப் போர்த்தலாய ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அச்சமயம், சில்வண்டினொலியும், நீர்வீழ்ச்சியின் சப்தமும், காற்றானது தன் நாயகிகளான விருட்சஜாதிகளினிடம், ஊடலாடலின்பங்களை நடத்துதலினாலுண்டாகும் ஒலியும், தவிரப் பிறிதொன் றிலது. அருவி வீழுமிடத்தில், வஞ்சகர் நெஞ்சம் போலிருண்ட குகையும், அதற்

குச் சற்று அப்பால், ஓர் பெரிய பசும்புற்களால் சூழ்ந்திரா நின்ற மைதானமும், அதன்கண் ஓர்காளிகோயிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்விடம், வருடத்திற்கோர் முறை சமீபத்துள்ள கிராமவாஸிகள் எல்லோரும் வந்து, அருவியில் நீராடி, அக்காளிகோயிலை வலம்வந்து, பூசை பொங்கல், முதலியன நடாத்திச்செல்லுதல் தொன்றுதொட்டுவழக்கம். மற்றகாலங்களில் அதுபயங்கரமான ஸ்தலமாகவே கருதப்பட்டிருந்தது. நாம் மேற்கூறிப் போந்த குகையானது வெளியில் நின்று பார்ப்போருக்கு அனேக காட்டுப்பூண்டுகள் சூழ்ந்திருப்பதால் தெரியவராது. இக்குகையின்கண் சந்திரன் தன் கிரகணங்களை வீசியகாலையில், அதனுள்ளிருந்து ஒளியும் இருவர் பேரிரைச்சலும் கேட்டது. உடனே ஓர் நெட்டையான மனிதன், தன் கையிற்றூங்கிய உடைவாளுடன் அவண் தோன்றினன். உடனே, அக்கூட்டத்தார் புலியைக்கண்ட புல்வாய்போன்று நிசப்தத்திலாழ்ந்தனர். அப்போது அத்தலைவன் "பின்னும் குடித்து விட்டு சண்டையும் சச்சரவு மொழியவில்லையா" என சிங்கம் கர்ஜ்ஜிப்பதைப்போல் கூறி, அக்கள்குடங்களை இங்கேகொண்மின் எனச்செப்பி, அதனை அக்கினிபகவானுக்கு ஆகுதி செய்துவிட்டனன். அப்போது இருவர் தோன்றி மிக்க வணக்கத்துடன் அம்மனிதனை இங்கே கொணர்ந்திருக்கின்றனம் எனக்கூவினர்.

"பணத்துடன் இல்லையா?"

"ஆம். குதிரைகளின் மீது பணத்தையும், அவனையும் மரத்தடியில் வைத்திருக்கிறோம்."

"தனியாய்த் தானே இருக்கின்றான்?"

"ஆம். கூடவேலைக்காரன் வருவதா யிருந்தும், நாங்கள் தடுத்து விட்டோம்."

அப்படியாயின் கூட்டாளிகளே! பொறுங்கள், நான் தனியாய்ச் சென்று சீக்கிரம்திரும்புவேன், என்னுடன் ஒருவரும் வரவொண்ணாது எனக்கட்டளையிட்டுச்சென்றான். நிற்க, இம்மனிதன் யாரென்பதும் இவன் சரிதைகள் எப்படிப்பட்டதென்பதையும் அறிந்து பின்னர் மேற்புகுவாம். நாம்கூறியவற்றால், இம்மனிதன் கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைவன் என்பது சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். இவனது நெட்டையான சரீரமும், பார்ப்போர் பயந்துநடுங்கி நாக்குளறிடும் கம்பீரத்தோற்றமும் கறுத்திருள் படர்ந்த முகமும், ஆட்டுக்கொம்புபோல் வளைந்து, முறுக்கி வளர்த்த மீசையும், பகாசுரனோ, கடோற்கஜனோ, எனுமாறு சிறந்து விளங்கும் உருட்டி வைத்தாற் போன்ற தேகதிடகாத்திரமும், வக்கிரதந்தங்களுடைய பல்வரிசையும், கண்டோரை நடுங்கவைத்தன. அவனோ ஜாதியில் க்ஷத்திரியன். அவன் உண்மையான பெயர் வீரசிங்கு. கூட்டாளிகள் கூப்பிடுகின்ற பெயரோ, துரைராஜ். அவன் அனேக இந்துமத சாஸ்திரங்களையும், புராணங்களையும் வாசித்துணர்ந்தவன். சகல பாஷையுமறிவான். அவன் அப்பிரதேசங்களில் செய்த கொலை, கொள்ளை முதலிய தீமைகளோ அளவற்றன. அவன் வெளியூர்களுக்குச் செல்லுவானாகில், கூர் பொருந்திய கோடாலியும், உடைவாளும், கொண்டேகுவான். சென்ற விடங்களிலெல்லாம், புராணங்கள் படிப்பதும் அதை கேட்போர் கொடுக்கும் பணத்தையும், சன்மானங்களையும் பெற்றுவருவான். அக்காலாண்டிருந்த மன்னர்கள், இவனைப் பிடிக்கப்பல சூழ்ச்சி

கள் செய்தும், பயனற்றவையாய்ப்போயின. இவன் கொணரும்சாமான்களை கள்ளத்தனமாய் விற்று, தானும்லாபத்தையடைந்து ஜீவித்துவருபவன் இவன்முக்கியநேசனாயிருந்தான். அவன்தான் அன்று மரத்தடியில் குதிரைகளின்மீது பணப்பையுடன், இவனைக்கண்டு பேசவந்தமனிதனாவான். அவன் இராமதாஸ் என்னும் சாவகாரி. (இன்னும்வரும்.)

K. S. வைத்தியனாதய்யர்.

# அறம்.

படிபுகழும் "பிரஜானுகூலன்" பத்திரிகா நேயர்களாகிய மேன்மை பொருந்திய பெரியோர் சிறியோரும், ஆண் பெண்ணிருபாலரும் ஓதி மகிழ்ந்து இஃதின்படி யொழுகுவதற் கத்தியாவசியமாகிய அறமென்னும் தான விஷயத்தைச் சிறிது விவரித்துரைக்குமாறு தற்போது துணிந்தபடியால், பேரிற் பெரியோரும் பாரிற்சிறியோருமெனது நல்லுரையை நன்குடனோதி புல்லருக்கும் நல்லறி வுண்டாகுமாறு வற்புறுத்திப் பல்லோரையும் நல்லோராக்கப் பிரயத்தனித்துப் பாங்குடனிப் பூமிசைப் பல்விசைபெற்றுப் புவ்னரக்ஷகனருளால் பல்லாண்டுவாழ்வீராக.

அறம் = தானம், தருமம், ஒழுக்கம், நீதி, நெறி, என விஷயத்துக்கேற்கப்பல பொருள்படும். இவ்வறம் சுருதி நூற்படி முப்பத்திரண்டு வகைப்படினும் நல்விடயமாகப்புரியும்நெறிகள் யாவும் நல்லறமாதலின் நாலெட்டினும் கனியுறப் பெறுவதால் அற நூலாசிரியரும் எண்ணான்கறத்தையே முதன்மையாக விளக்கியிருக்க, எம்மாற் சகல வறத்தையும் யீண்டெடுத்துரைக்க வகையுளதோ? இல்லையாதலின் அன்னோர் கருத்திற்கேற்றவைகளிற் சில முதன்மைகளை நாமும் ஆராய்ந்தறியவேண்டுவது நமது கடனாதலால் ஈங்கு சென்றபடி மொழிவோமாக.

அறவினம் இருவகையாம். அஃதெவை யெனின் இல்லறந் துறவறமென்பாம். இவ்வீரறங்களின் பன்மையே வேற்றறங்கள்; பிரதம மாவதிஃதிரண்டுந்தான். ஆயினும், இவ்விரண்டினுட்சிறந்தது இல்லறமொன்றுதானெனச் சீரிற்சிறந்தோரும், பலநூலைப் பகர்ந்தோருங் கூறியுள்ளார்.

இல்லறந்துறந்து பரமபதங்களையே தியானித்து நிற்கும் மகா யோகிகளுக்கே துறவறஞ் சிறந்தது. மேதினியுறும் மானிடப்பிறவியினர் யாவரும் துறவறமே இச்சிப்பாராயின், அத்துடன் மானிடப்பிறவியே வேரற்றுப்போக, ஜனனங்குறைய ஜகதலமே சூன்யமாய் விடுமென்பது சகலருக்கும் தெளிவாய் விளங்கக்கூடிய விஷயம். ஆனதுபற்றியே தீனதயாளரான தரணிபாலகனருட்கருணாமிர்த வாரியிலாழ்ந்திய மூதோரும் மேலோரும் நூலோரும் இல்லறமே சிறப்பறமென்றும் இல்லறத்துய்ப்பவர்க்கே பற்பல நல்லறம் புரியக் கூடுமென்றும் பக்குவமாய்ப் பகுத்தறிந்துரைத்தன ரென்பது திண்ணம்.

இல்லறமில்லையே லிவ்வுலகமில்லை என்பதற் குதாரணமாக, "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை-மழையும்- தவமிலாரில் வழியில்லை- தவமும்-அரசிலாரில் வழியில்லை- அரசனும்- இல்வாழ்வாரில் வழியில்" எனவும் "இல்லற மல்லது நல்லறமன்று" எனவும் பன்னெறிகளையாதரவாய் பகர்ந்தனர் சான்றோரும். ஆகவே, இல்வாழ்வுற்றவர்கள், தமது இல்வாழ்வை நல்வாழ்வாகக்கொண்டு செய் கருமங்களைச் சிறக்க முடித்து சக்

திக்கேற்றவாறு தானதருமங்களைச் செய்து பல்லோருக்கும் தம்மாலிய
ன்ற நன்மைபுரிந்து, புல்லரையும் நல்லோராக்க முயன்று ஐயமிட்டுண்டு
சான்றோரினத்திருந்து ஒப்புரவொழுகி கேள்விமுயன்று நற்கலை கற்று
நன்மதியுற்று, அறங்கள்மதித்து ஆதியைத்தொழுது நல்லிசைபெற்று
நீடு வாழ்ந்து வீடு பெறவேண்டுவதற்கு விரைவீர் என்பதைக்குறித்தே
மூதாட்டியும் 'அறஞ்செயவிரும்பு' 'தானமதுவிரும்பு' என்றோதினள். ஆ
கவே நாம் புரியும் அறமானது "எதா சக்தி மஹாபலம்" என்றபடி நம்மா
லியன்றமட்டில் ஐயமிட்டும் நற்கருமங்களுக்குரிய பல நல்லறங்கள் செய்
தும் நமக்கும் பிறர்க்கும் உற்றோர் பெற்றோர் சுற்றத்தார் முதலிய பந்து
வர்க்கங்களுக்கும் அன்றியும் மிருகபக்ஷி முதலியசகல ஜீவ ஜெந்துக்களுக்
கும் நம்மால் திரணமாவது யாதொரு அனர்த்தங்களும் நேரிடாது கூ
டியவரையில் நன்மையே பயக்குமாறு நல்லறம் புனைந்திருக்க முயற்சித்
தலே மேன்மை. இதற்கு முதன்மையாக பொய்யைத் தவிர்த்து மெய்
யைத் தழுவி மேலோர்க்குப் பொய்யா விளக்கு தான் திருவிளக்கெனக்
கொள்ளுமாறு உண்மையை அணிகலனாக உடைத்தா யிருப்பவனே
நல்லறம் புனைந்திருப்பவனாவன். மற்றோர் சொற்பனத்திலு மாகார்
என்பது திண்ணம். ஆனதுபற்றி பத்திரிகாபிமானிகளே! பல தொல்
லைகளை மேற்கொண்டு உலக நயத்தை நாடி யுழைக்கும் பத்திரிகாசிரி
யர்களுக்கும் பத்திரிகா லிகிதர்களுக்கும் நம்மால் யாது கைம்மாறு புரியற்
பாலது? இத்தகைய நல்விஷயத்தில் நல்மனம் பொருந்தி தம்மாலான
பிரதியறமாக பத்திரிகைகளை விர்த்தி செய்யப் பொருளுதவி புரிந்தும் ப
த்திராதிபர் பத்திரிகாலிகிதர் முதலானோருக்கு சிரமம் தோன்றாதுழைக்
கத்தக்க நீடுஆயுளையும், தருமனோ ஆக்கத்தையும் அளிக்குமாறு கிருபா கட
லாகிய கடவுளை ஸ்தோத்தரிப்பதும் முக்தி யடைய வேண்டியதற் குரிய
முயற்சிகளைச் செய்வதும் இகபர சுக சாதக கருமங்களைப் புரிவதுமே
நல்லறமாகிய இல்லறம் புனைந்தோர்க்குரிய கடனாகும்.

P. S. அனந்தநம்பியார்.

# தமிழ்ப்பாஷை.

(முன்தொடர்ச்சி)

இனி இது வழங்கும் இடம் ஆராய்வாம். இத்தமிழ் செந்தமிழ்,
கொடுந்தமிழ் என இருவகைத்து. இவை வழங்குவன முறையே செந்த
மிழ் நாடு கொடுந்தமிழ் நாடு என இருவகைப்படும். அவற்றுள் செந்த
மிழ் நாடாவது "கங்கைவாழ் வேணிக்கடவுளும் குமரக்கடவுளும் அகத்
தியனாரும் கலைமகள் வடிவப் புலவரும் மேன்மைக் கௌரிய வேந்தரும்
இருந்து சங்கமாப் பலகை யேறியே வளர்த்த" தமிழ்க்கிடமான பாண்டி
வள நாடே. இந்நாட்டின் எல்லைகள் வடக்கே மருதயாறும் கிழக்கே மரு
ஆரும் தெற்கே வைகையாறும் மேற்கே கருஆரும் என்று சேனாவரையர்
வரையறுத்துள்ளார். செந்தமிழ் நிலத்தைச்சார்ந்த பன்னிரு நிலங்களு
ம் கொடுந்தமிழ் நிலங்களாம். இவை இன்ன என,

"தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண் பூழி
பன்றி அருவாவதன் வடக்கு—நன்றாய
சீதமலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்". என்னும் வெண்பாவால்அறிக.

[செந்தமிழ் நிலத்தெல்லையும் அதனைச் சூழ்ந்த பன்னிரு நிலங்களும் வருமாறு காண்க:—




நிற்க.]

நன்னூல் இயற்றிய பவணந்திமுனிவர் இச் செந்தமிழ் நிலத்தையும் கொடுந்தமிழ் நிலத்தையும் பொதுவாய்த் தமிழ் நிலம் எனக்கூறி அத்தமிழ் நிலத்தெல்லை "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" என வரையறுத்தனர். (அதாவது வடக்கே திருவேங்கடமலை, கிழக்கே பங்காளக்குடாக்கடல், தெற்கே கன்னியாகுமரிமுனை, மேற்கே கடகம்.) ஆனால், தமிழ் நாடானது கன்னியாகுமாரிக்கும் அப்பால் விசாலித்திருந்ததென்றும், 2000 வருஷங்களுக்கு முன் அப்பூமி பிரளயத்தால் அழிந்து போயிற்றென்றும் கூறுகிறார்கள். நன்னூலார் குறித்துள்ள தேயங்கள் அவர் காலத்திய தமிழ் நாடுகளே. தற்போதோ சிலோன், சிங்கப்பூர், பினாங், மலாக்கா, ஆபிரிக்காவின் தெற்கில் உள்ள கேப்காலனி, நட்டால், பர்மா முதலிய இடங்களிலும் இப்பாஷை பேசப்பட்டு வரும் விஷயம் நாம் அறிவம். இப்பாஷையானது தற்காலத்தில் 14500000 ஜனங்களால் பேசப்பட்டு வருகிறதென்றும் அதற்கு சுமார் 58500 சொற்கள் உண்டென்றும் தெரியவருகிறது. இனி இத்தமிழ் மூல பாஷையா அல்லது கிளைப் பாஷையா என்று ஆராயப்புகுவோம். கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற மொழி நூல் வல்லோர் பலர், உலகின் கண் வழங்கும் மொழிகளை "ஆரிய" மொழிகள் என்றும் "துரானிய" மொழிகள் என்றும் இருவகையாகப் பிரித்து, ஆரிய மொழிகள் பலவற்றுள்ளும் ஸம்ஸ்கிருதம் தலை சிறந்ததொன்றும்; அவ்வாறே துரானிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ் மொழி தலை சிறந்த தொன்றும் எனக்கூறியிருக்கின்றார். ஆகவே, ஸம்ஸ்கிருதமும் தமிழும் வெவ்வேறு பாஷைகள் என்பது வெள்ளிடைமலை போல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ?

(இன்னும் வரும்.)

M. கோபாலகிருஷ்ணையர்

அக்கிராஸனாதிபதி "மாணவர் செந்தமிழ்ச் சங்கம்" மதுரை.

# கலாப்பிரகாசனி.

## ஒன்பதாவது அத்தியாயம்.

"உனது தந்தை யழைத்து வரச் சொன்னாரென்று
உரைத்ததொரு பிரதாபன் சொல்லை நம்பி
கனத்துடனே வந்திந்த காட்டில் யானே
கவலை கொண்டு மோசத்தால் கதறலானேன்
இனி யெனது தாய் தந்தை கணவன் சேவை
யெங்ஙனம் யான் கண்டு களித்திடுவே னந்தோ
தனி வனத்தி லிருக்க மனத் தயிர்யமுண்டோ
சர்வ பரிபூரணனே தர்க்காப்பாயே!"

"வானமது கருகருத்து வளர் பிறையைக் காணாத வல்லிருட்டின்
கானமதில் பேய்க் கரடி புலி யானைக் கோட்டமதிற் காதடைத்து
யானுருகித் தனிமாள விடுத்ததுவுந் தெய்வகதி யல்லால் வேறு
தானுரைப்ப தெனவினிமேல் தாய்தந்தைகணவனையுஞ் சாருவேனோ!"

என்றொரு தருணீ சிரோமணி பலவாறு அழுது புலம்புவாளாயினாள். வெகுதூரத்தில் ஒரு வெளிச்சம் தோன்றிற்று. பார்த்தாள் அஃதென்னவென்று யோசித்தாள். இதற்குள்ளாக ஒரு ஜனஇரைச்சலும் கேட்டது. சிறிது உற்று நோக்கினாள். ரத கஜ துரக பரிவார ஸகிதம் அநேக ஜனங்கள் யாரையோ தேடிக்கொண்டு வருகிறது போல் தோன்றிற்று. உடனே மனதில் பலவித சந்தேகங்களுண்டாயின. கடைசியாக அதிக பயத்துடன் ஒரு மரமேறினாள். "மேலே யாரோ உட்கார்ந்திருந்தது போல் காணப்பட்டது" "பேயோ பிசாசோ வென்றஞ்சினாள்" கடைசியில் சற்று தைரியத்துடன் ஏறிப் போய்ப் பார்த்ததில் தன்னைப்போன்ற ஒரு ஸ்திரீ அவ்விடம் உட்கார்ந்திருக்கக் கண்டாள். பிறகு இருவருக்கும் நடந்த சம்பாஷணையினால் "அந்த ஸ்திரீ வழிதப்பி இவ்விடம் வந்து சேர்ந்ததாயும் காட்டில் வாழும் துஷ்ட மிருகங்களுக்கு அஞ்சி மரமேறியதாயும் அவள் பெயர் மனமோஹினி என்றும் தெரிய வந்தது. இதற்குள்ளாக வெகு தூரத்தில் காணப்பட்ட ஜனங்கள் அதிக சமீபத்தில் வந்துவிட்டனர். அவர்கள் இம்மரத்தையே நோக்கி வருகிறவர்கள் போல் தோன்றிற்று. நமது அங்கனாமணி பலவாறு சந்தேகித்தாளாயினும் அவள் அருகில் உட்கார்ந்திருந்த மனமோஹினிமட்டும் அதிக சந்தோஷத்துடனேயே இருந்தாள். இதற்குக் காரணம் இன்னதென்று தெரியவில்லை. கடைசியாக ஜனங்கள் இவர்கள் உட்கார்ந்திருந்த மரத்தைச் சுற்றிக்கொண்டனர். உடனே மனமோஹினி கீழே இறங்கினாள். அவளைக் கண்ட ஜனங்க ளனைவரும் அத்யானந்தபரிதர்களாய் அடிபணிந்து வணங்கலாயினர். பிறகு நமது அங்கனாமணியைப் பலவாறு தேற்றித் தன்னுடன் அழைத்துக்கொண்டு ஜனங்கள் ஸகிதம் அக்காட்டின் வழியே சென்றாள். உஷத்காலமாயிற்று. திவாகரனும் உதயமானான். சமீபத்தில் ஒரு நகரமும் காணப்பட்டது. விசாரித்ததில் கமலாபுரி என்று சொல்லினார். மனமோஹினி நமது அங்கனாமணி ஸகிதம் அரண்மனைக்குச் சென்றாள். அநேக உபசாரங்களும் நடந்தன. காலை போஜனமும் ஆயிற்று. இருவரும் அந்தப்புறஞ் சென்றனர். அங்கும

னமோஹினி தான் அணிந்திருந்த ஆடைகளை யவிழ்த்தெறிந்து புருஷரூபமானாள். இதைக் கண்டதும் நமது அங்கனாமணி ஒன்றும் தோன்றாது பிரமித்தாள். உடனே அவள் கையைப் பிடித்துக்கொண்டு ஹே சுகுணமாலினி! நான் மனமோஹினி யல்ல. என்னைக் கலாலங்கிருத னென்று அழைப்பார்கள். நான் இந்த கமலாபுரியை யரசாக்ஷி செய்து வருகின்றேன். சுமார் இரண்டுமாதங்களுக்குமுன் ஒருமகான் என் கனவில் தோன்றி "நீ சுகுணமாலினியை விவாகஞ் செய்திடு" என்று கூறி மறைந்தார். அவர் மறைந்தவுடன் நீ எனதருகில் சயனித்திருந்ததுபோல் தோன்றிற்று. உடனே விழித்துக்கொண்டேன். பிறகு உன்னைக் காணவேண்டுமென்ற ஏக்கமே பெரிதாய்த் தூக்கமின்றி காலங்கழித்தேன். நேற்றையதினம் வேட்டையாட வெண்ணி ஸ்வபரிவாரத்துடன் வனத்திற்குச் சென்றேன். வெகுநேரம் வேட்டையாடிக் கடைசியில் ஒரு புலியைத் துரத்திக்கொண்டு நானும் எனது சேவகனுமாக வந்தோம். புலி ஒருமலை மீது ஏறித் தப்பித்துக்கொண்டு போய்விட்டது. இதற்குள் இருளும் அதிகரித்து வரவே மனதிற்கு ஆயாசமுண்டாயிற்று. பிறகு நானும் எனது சேவகனும் அவ்விடத்திற் கிடைத்த காய்கனிகளை யருந்தி அக்காட்டிலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்தோம். அத்தருணததில் நீ அழுத ஓசை கேட்டது. நீ சொல்லி வந்ததை யெல்லாம் கவனித்ததில் உன்னை இன்னாரென்று தெரிந்து கொண்டேன். உடனே மனதில் வியசன முண்டாயிற் றென்றாலும் இவ்வளவு சீக்கிரத்தில் உன்னைக்காணக் கிடைத்தது பற்றி யானடைந்த சந்தோஷமே அதைவிட அதிகமாயிருந்தது. அத்தருணம் அம்மரத்தின்மீது தற்செயலாய் அகப்பட்ட இரவிக்கையையும் சேலையையும் எடுத்து அணிந்து கொண்டு எனது பரிவாரங்களை யழைத்துவரும்படி என் சேவகனை யனுப்பிவிட்டுப் பெண்வேடத்துடன் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது சிறிது நேரத்திற்கெல்லாம் தீவட்டிகள் சகிதம் எனது பரிவாரங்கள் வர அவைகளைக்கண்டு அச்சமுற்று நீயும் நானிருந்த மரத்தின் மீதே ஏறினாய். நானும் உன்னை அதிக பிரியத்துடன் உட்காரச்செய்து என்பெயர்மனமோஹினி என்று சொன்னேன். பிறகு நடந்த சங்கதிகளெல்லாம் உனக்கே தெரியவரும் என்று கூறினார். இதைக் கேட்டதும் சுகுணமாலினி அதிக ஆனந்தத்தோடு "ஹே ஸ்வாமி நீங்கள் தான் பிராணபதி யென்று கலாலங்கிருதரின் பாதங்களில் நமஸ்கரித்தாள். அவரும் அதை யன்புடன் ஏற்றுக்கொண்டார். பிறகு சந்திரகிரி இராஜ்ஜியத்திற்கு ஆள் அனுப்பி விசாரித்ததில் கருணாகர னிறந்த செய்தியும் வீரகேசரி மன்னர், கமலாக்ஷி, சுலோசனி ஆகிய இம்மூவரும் அரணமனையை விட்டகன்ற வர்த்தமானங்களும் தெரியவந்தது. சுகுணமாலினி இதைக் கேட்டு வெகுவாய் வியசனித்து இவ்வளவு காரியங்களும் பிரதாபன், துன்மதி இவ்விருவர்களால் தான் நேர்ந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்து சந்திரகிரியைக்கைப்பற்றும்படி கலாலங்கிருதரிடம் கூறினள். அவரும் அப்படியே சந்திரகிரியின் மீது படையெடுத்துப்போய் அதைக் கைப்பற்றித் துன்மதி, பிரதாபன் இவ்விருவர்களையும் சிறையிலடைத்து சந்திரகிரியைத்தன் இராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொண்டு செங்கோலோச்சிவந்தார்.

(தொடர்ச்சியுண்டு.)

# ஹிதோபதேசம்.

ஸகோதரிகாள்! உங்களுக்கென்று நாம் கூறும் சிலபுத்திமதிகளை அதிக கவனமாய்ப் படித்து அதன்படி நடப்பீர்களானல் வெகு ஸுகிகளாவீர்கள். எல்லோராலும் கொண்டாடப்பட்டு நற்பெயரெடுப்பீர்கள். ஆனதால் இதைக்கவனியுங்கள். யாரிடத்தில் தனமில்லையோ அவர்கள் ஒரு நாளும் சுகப்பட மாட்டார்கள். பூமி, தான்யம், மாடு, கன்றுகள், தங்கம், வெள்ளி, இரத்தினம் முதலியவைகளிருந்தாலும் அவைகளால் நாம் அதிக பிரயோஜன மடைந்து லாபத்தோடு வாழ்ந்தாலும் அவைகள் சாஸ்வதமான தனமல்ல. நமக்கு சாஸ்வதமானதும் ஸுகம் தரக்கூடியதுமான தனம் எது? வித்தியாதானமே. அது நாசரஹிதமானது. அஞ்ஞானத்தில் அகப்பட்டுத் தவிக்கும் மனிதனுக்கு வித்தையானது சூர்யனைப்போல் பிரகாசத்தைத் தருகின்றது. நமக்கு வெளிக்கண்ணிருப்பது நிஜமானாலும் ஞானக்கண் இல்லாவிட்டால் நாம் அந்தகர்கள் தான். ஞானத்துக்கு வித்தை தாயைப்போல் உள்ளது. உனக்கு ஞானம் வேண்டுமானல் நீ நன்றாய் வித்தைகற்கும்படி பிரயாஸைப்படு. பாலோடு தண்ணீரைச் சேர்த்தால் பாலின் நிறம் தண்ணீருக்கு உண்டாகும். சேற்றோடு தண்ணீரைக் கலந்தால் அந்த நிறம் அதற்கு உண்டாகும். அதைப் போலவே நீங்களும் நல்ல ஸகவாசத்தால் உத்தமிகளாவதும் கெட்ட ஸகவாசத்தால் துஷ்டைகளாவதும். ஆனதால், ஆரம்பத்தில் வித்தையைக்கற்று அவைகளிலுள்ள ஸத்போதனைகளையும் நீதிகளையும் மறக்காமல் அனுசரித்து வாருங்கள். பால்யத்தில் தான் பிரயாஸமான வித்தைகளை, கற்கக்கூடும். அப்புறம் மந்தமதிகளாய் விடுவீர்கள். பிரதமத்தில் வித்தையைக் கற்பதோடு கூட மரியாதைகளையும் கற்கவேண்டும். நீங்கள் புத்திசாலியாவதோடு மரியாதையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். பெரியோர்களோடு பேசும்போது நீ அவன் இவன் என்று ஏகவசனங்களைப் பியோகிக்காமல் பகுவசனங்களாகிய நீங்கள் அவர் இவர் என்று சொல்லுங்கள். யாரோடு பேசினலும் சிடுமுகங்கொள்ளாமல் பிரஸன்ன முகத்தோடு பேசவேண்டும். ஸத்யமான வார்த்தைகளைத் தவிர பொய் சொல்லப்படாது. சோம்பேறித்தனமாயிருக்கக் கூடாது. அறுபது நாழிகையும் புருஷனைப்போல் படிக்கப் படாது. அது பிசகு. உங்கள் தாய்மார்கள் செய்யும் கிருககிருத்யங்களை நீங்கள் செய்யக்கற்றுக் கொள்ளுங்கள். அத்துடன் வினயத்தையும் கைக்கொள்ளவேண்டும். அது தான் உங்கள் ஸ்நேகிதி. அதைக் கொண்டு துஷ்ட மிருகங்களைக் கூட வசப்படுத்திக் கொள்ளலாம். அகங்காரத்தை சத்துருவென்று நினைத்துக் கொள்ளுங்கள். யாரோடு எந்த வார்த்தை பேசினலும் மனதுக்குள் மூன்று தடவை யோசித்து சொல்லலாமா வேண்டாமாவென்று கவனியுங்கள். நீங்கள் நல்ல ஸகவாஸம் செய்யவேணுமேயன்றி அண்டை அயலார் வீட்டில் உட்கார்ந்து அவள் புருஷன் நொண்டி, இவள் நடத்தை இப்படி, அவள் மூக்குபெரிது, இவள் மாமியார் துஷ்டையென்று இல்லாதவம்புகளைப் பேசப்படாது. நம்மெல்லோருக்கும் விசார கர்த்தரான கடவுளிருப்பதால் அவருக்கு விரோதமாய் நாம் அன்னியரை குறை கூறப்படாது. இந்த ஸ்திதியில் நீங்கள் நடந்து கொள்வீர்களானல் உங்களுக்குத் தகுந்தாப்போல் ஒரு உத்தமபுருஷன் அகப்படுவான். அவனோடு பதிபக்தைகளாய் நீங்கள் ஸம்ஸாரம் செய்யலாம். அந்த ஸம்ஸாரகாலத்தில் இப்போ திருப்பதைவிட

அதிக ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும். பதியின் மனப்படி சன்மார்க்கிகளாய் உத்ஸாக,குணமுள்ளவர்களாய் பரநிந்தை, பரஸ்வத்து பரபுருஷகமனம் இவைகளைத் துறந்தவர்களாய் எப்பொழுதும் ஈஸ்வரனைத்தியானித்து தர்மமார்க்கத்தைக்கைவிடாமல் அனுஸரித்துவிவேகமாய் நடந்து கொள்ளவேண்டும். இப்படி யெல்லாம் நீங்கள் நடந்து வருவீர்களானால் உங்களை உத்தமிகளென்று எல்லோரும் கொண்டாடுவார்கள். இவ்வனம் அனைவரும் உங்களைக் கொண்டாடத்தக்க வண்ணம் ஸன்மார்க்கத்தை யனுசரித்து நற்பெயரடைய முயற்சிக்கக் கடவீர்களாக.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

## ஹிருத்யானந்தினி.

அனேகருக்கு ஹிதோபதேசங்களைச் செய்து பரோபகாரமான பல விஷயங்களைப்புரிந்து நற்குண நற்செய்கைகள் நிறைந்த நாயகனுடன் கூடி நானிலம் புகழ வாழ்ந்திருந்த நாரியர் நாயகமான ஹிருதயானந்தினி எனும் பெயரிய பதிவிரதா ரமணியின் சரிதையாகுமிது. இதையும் இன்னுமிதுபோன்ற அனேக நற்கதைகளையும் பலவருஷங்களுக்குமுன் இந்தியாவின் சிருங்காரவனம் என்றழைக்கப்படும் வங்கதேசத்தில் மிகுந்த பிரக்யாதிபெற்றுத் திலகம்போல் ஜ்வலித்த பங்கிம் சந்திர சட்டோபாத்யாய ரவர்கள் வங்காளிபாஷையில் வெகு சமத்காரமாய் இயற்றி வெளியிட்டார். அக்கதைகள் பிரஞ்சு,கிரீக் முதலிய பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் கன்னட பாஷையு மொன்று. இப்பாஷையில் அக்கதைகளை மொழிபெயர்த்துப் பிரகடனஞ்செய்த கனவான் மைசூர் டிஸ்திரிக்ட்முனிஸீப் மகா-ா-ாஸ்ரீ B. வெங்கிடாசாரியாரவர்களாவர். மேற்படி கதைகள் பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே அவற்றின் அருமையை நன்கு விளக்குவதற்குத்தக்க சான்றாகும். இக்கதைகளை அனைவரும் வாங்கி வாசித்து ஆனந்திக்க வேண்டுமென்ற அபேக்ஷையினாலும், நந்தமிழ் நாட்டார்மீது வைத்திருக்கும் அபிமானத்தாலும்,நமது சந்தாநேயர்கட்கு சந்தோஷத்தை விளைவிக்கவெண்ணியும் நமதுபத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிடராகிய T. V. கிருஷ்ணசாமிசாஸ்திரியாரவர்களை மைசூருக்கனுப்பி மகா-ா-ாஸ்ரீ B. வெங்கிடாசாரியா ரவர்களிடம் சுமார் 50க்கு மேற்பட்ட கதைகளை மொழிபெயர்க்க அனுமதிபெற்றுக்கொண்டு வரச்செய்தோம். இக்கதைகளை நமது அனுகூலனின் இரண்டாவது ஸம்வத்ஸராரம்பத்திலிருந்து (அதாவது ஏப்பிரல் மதிதொடங்கி) மாதமொரு கதையாக வெளியிடுவதாய் நிஷ்கரிஷித்து அதற்கென்று பிரத்யேகமாய் டிபார்ட்மெண்ட்கள் ஏற்படுத்தி நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவரப்படுகின்றன.

இக்கதைகளிலெல்லாம் மிகச்சிறந்ததாயும் 50 கதைகளினின்றும் பொறுக்கி யெடுத்ததாயும் பின்னால் வெளியிடப் போகும் பரிமளா, கிருபகுணகரி, கலாரஞ்சனீ முதலிய பல கதைகளுக்கும் அஸ்திவாரம் போலுமிருப்பது ஹிருதயானந்தினி கதை என்றே நிச்சயமாய்ச்சொல்லலாம். மேன்மைதங்கிய இக்கதா நாயகியின் குணம் வெளிப்படும்போது இப்பெயர் இத்தருணீ சிரோமணிக்கே தகுமென்பதையும், இவளுடைய

உன்னதமான நடத்தைகளையும், உத்தமமான குணங்களையும் நம் நாட்டு
ஸ்திரீகள் பின்பற்றி நலமடைய வேண்டுமென்பதையும், மனிதர்களுக்கு
ண்டாகும் கஷ்ட சுகலாப நஷ்டங்களுக்கு முக்கிய காரணமாயும் நல்ல
தமாகிய இல்லறத்திற்கோர் திலகம்போலும் விளங்கும் மாதர்களின்மன
தை நல்வழியில் பிரவர்த்திக்கச்செய்து ஞானத்தை யூட்டுவதற்கு இக்க
தையே போதுமென்பதையும், ஈஸ்வர பக்தியும், நீதியும் நன்னெறியும்,
சொல் நயமும், பொருள் நயமும், இப்புத்தகத்தில் ஏராளமாயிருக்கின்ற
னவென்பதையும், வாசகர்கள் வெகு சுலபமாய் அறிந்துகொள்வர்.
ஹிருதயானந்தினியைப் போல் ஒவ்வொரு ஸ்திரீயும் சுத்த மனதோடும்
நல்ல நடத்தையோடும் ஏகரீதியான பிரியத்தோடும் தத்தம் நாயகரை
ச் சந்தோஷப் படுத்தினல் ஈருலகவாழ்க்கையிலும் இன்புறலாம். ஒவ்
வொரு அத்தியாயத்திலும் அடங்கியுள்ள விஷயங்கள் மனதிற்கு மட்
டற்ற மகிழ்ச்சியைத் தருவனவாயும் இன்பம் செறிந்தவாக்கியங்கள் பல
நிறைந்ததாயும் ரசம் பொருந்தியதாயும், அதிக முக்கியமானவைக ளா
யு மிருக்கின்றன. இப்புத்தகத்தில் இடை யிடையே வரும் சாதுர்ய சம்
பாஷணைகள் படிப்பதற்கு வெகு இனிமையாயும், விவேகத்தை விருத்
தி செய்வனவாயும், சன்மார்க்கத்தைக் கற்பிப்பனவாயும் விளங்குவது
டன் வாசிக்குந்தோறும் ஆனந்தம் அதிகமாகிக் கொண்டே வந்து மு
டிவில் புத்தகத்தை கீழேவைக்க மனம்வராமல் பன்முறையும் திருப்பித்
திருப்பிப்படிக்கும்படியாக அதிலுள்ள இன்பமே தூண்டும் வண்ணம்
வெகு சாதுரியமாய் எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தில் இதுவ
ரையிலும் நம்மவர்கள் கேட்டிராத வங்கதேச சம்பிரதாயங்களும் அக்கா
லத்திய மாதர்களின் கற்பும் அவர்கள் அனுசரித்த சன்மார்க்கமும் நரசி
ரேஷ்டர்களான புருஷஸிம்ஹங்களின் ஸாகஸங்களும் அடங்கியிருக்கி
ன்றது.பிரதிநித்தியமும் நாம்புசிக்கும் அன்னம் காய்கறி முதலியன ஒரே
விதமாயில்லாமல் பலவிதங்களாயிருந்து உருசியைத்தருவதுபோல் பல
வித ரசங்கள் செறிந்து ஸ்வீகரித்துக் கொள்ளத்தக்கதான நல்விஷயங்
கள் நிறைந்துள்ள விதம் விதமான அத்தியாயங்களையடக்கி அதிக விசித்
திரமாயும் சொகுசாயும் கதை அமைத்திருக்கும் விநோதமும், ஆங்காங்கு
காணப்படும் வர்ணனைகளும், வாசிக்கவாசிக்க அத்யந்த மகிழ்வைத்தருவ
னவாய்ஜ்வலிக்கின்றன. ஸ்திரீபுமான்கள் இயற்ற வேண்டிய கருமங்களி
ன் அவஸியமும் உத்தம புருஷர்கள் நாடவேண்டிய சன்மார்க்கமும் பா
லர் பாலகிகள் அனுசரிக்கவேண்டிய நல்வழியும் தக்கஉதாரணங்களுடன்
பலசந்தர்ப்பங்களிலும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. உலகில்வசிக்கு
ம் மனிதர்கள் மற்றவர்களைச் சகோதரர்களாக எண்ணி நேசித்து ஒருவர்
மீதொருவர் பாராட்டவேண்டியவிஸ்வாசமும், கடவுளை ஆஸ்ரயிக்கும் பக்
தர்களின் மனோபீஷ்டங்கள் நிறைவேறும் விதமும், ஸதிபதிகளிருவரு
ம்ஒற்றுமையை மேற்கொண்டு பிரீதிவிஸ்வாசத்துடனிருந்து சன்மார்க்க
த்தில் நடந்துகொள்ளும்படி செய்யும் சாதுர்யங்களும், கதாநாயகியான
ஹிருதயானந்தினி. தன்கணவனிடத்தில் செலுத்தும் பதிபக்தியும், அவ்
வங்கணமணி தன் கற்பைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டிப்புரிந்த பலவி
தஸாகஸங்களும், மத்தியமார்க்கத்தில்கள்வர்களால் துன்பப்பட்டுக்கலங்
கும் பரிதாபமும், திருடர்கள் செய்யும் சூழ்வினைகளும் தந்திரோபாயங்க
ளும், பதியின் பிரிவாற்றுமையும், அதினுலடையும்சோகமும், கடைசியில்
கணவனைக்கண்டுபிடிக்கும சாமார்த்தியங்களும், யுவதிகளைத்கண்டமாத்தி

ரத்தில் புருஷர்களுக்குண்டாகும் சுகதுக்கங்களும், சிறுவர் சிறுமிகளுக்கென்றே எழுதப்பட்டிருக்கும் அனேக நீதிமார்க்கங்களும், இன்பகரமான கதைத் தொடர்ச்சியும், 'சக்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல்" இதற்கிடையிடையே சேர்ந்திருக்கும் பலசரித்திரங்களும், கடைசியில் அவைகளனைத்தையும் அழகுபெற முடித்திருக்கும் விநோதமும், படிக்கப் படிக்கப்பேரானந்தப்பெருக்கையும் அத்யாச்சர்யத்தையும் உண்டுபண்ணும். ஒவ்வொருவரும் தம் மக்கட்கு இக்கதைகளை வாங்கித்தருவது பெரிய ஆஸ்திசேர்த்து வைப்பது போலாகும் இப்புத்தகத்தை வாசிப்பவர்களின் மனதை நல்வழியில் செலுத்துவதற்கு மற்றொருஆசார்யனையும், சந்தோஷத்தை விளைப்பதற்குவேறொரு மித்திரனையும் தேடவேண்டிய அவஸியமில்லை. நவரசங்களும் செறிந்து நல்லநடையில் எழுதப்பட்டிருக்கு மிக்கதையானது வாசிப்பதற்கு வெகு ஆனந்தகரமாயும், அடங்கியுள்ள விஷயங்கள்ஸ்வாரஸ்யமாயும், கதையின்போக்கும் முடிவும் இன்பகரமாயும், அமைத்திருக்கும்முறை வெகுவிநோதமாயுமிருக்கின்றது. பலரும் கொண்டாடத்தக்கதான சிறந்த விஷயங்களடங்கி நல்லாசிரியர்களைப் போலிருந்து நல்வழி கற்பித்து படிப்பதற்கு அதிக இனிமையும் ரசமும்பொருந்தி வேதாந்திகட்கும் உவப்பாயிருக்கப்பட்ட அனேக ஞான விஷயங்கள் செறிந்து வாசிக்க வாசிக்க மகிழ்ச்சியையும், கேட்கக் கேட்கப் பிரீதியையும் உற்சாகத்தையும் மேன்மேலும் உண்டாக்கி, உலகத்திலுள்ள ஒவ்வொருவருடையவும் நடையுடை பாவனைகளை நன்கு விளக்கி, படிக்கப் படிக்கப் பரவசமளித்து முடிக்கமன மெழாமுதன்மையைப் பெற்றுக் கற்றோர், மற்றோர் எற்றோராலும் அபிமானிக்கப்படும்படியாக இருக்கின்றதாகலான் இஃதை நமது கையொப்ப நேயர்கட்கு இனாமாயனுப்பி எமது நன்றியறிவை வெளிப்படுத்தத் தீர்மானித்தனம்.

மைசூர் போலீஸ் இனிஸ்பெக்டர் ஜெனரல் மகா-ள-ள-ஸ்ரீ. A. இரெங்கசாமி ஐயங்காரவர்கள் மைசூர் அரண்மனை மேலதிகாரி (Place Controller) யாகிய மகா-ள-ள-ஸ்ரீ இராய்பஹதூர் V. N. நரசிம்ஹ ஐயங்காரவர்கள், முதலிய பல கனவான்களாலும் நன்கு மதிக்கப்பட்டு மிகுந்த பிரக்யாதி பெற்றுள்ள பிரஜானுகூலன் பத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிடராகிய T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரியவர்களால் திருவாங்கூர் சமஸ்தானம் திவான் ஸர் V. P. மாதவராவ் C. I. E. அவர்கட்கு இந்த ஹிருதயானந்தினி புத்தகமானது ஸமர்ப்பிக்கப்படுகின்றது.

இன்னும் இப்புத்தகத்தை வாசிப்பதாலுண்டாகும் உபயோகத்தையும் அதின் பெருமையையும் இனி நாம் சொல்ல வேண்டிய அவஸியமின்றி நமது அன்பர்கள் தாங்களே யறிந்து கொள்ளக்கூடும். ஹிருதயானந்தினி என்னும் பெயரினாலேயே இன்பத்தைவிளைவிப்பதாயுள்ள இச்சர்வ சிலாக்கியமான புத்தகத்தை இப்பொழுது அச்சிட்டு வருகின்றோம். எப்போதும் முற்காலத்திய பண்டித சிரோன்மணிகளால் இயற்றப்பெற்ற எச்சரிதைகளும் ஒவ்வோர் காரணங்களைத் தெரிவிக்கவே முடிவு பெற்றிருக்கின்றனபோல் நாம் இனி வெளியிடப் போகும் வநிதா ரத்தினத்தினுடைய சரிதையின்சாராம்சமும் அதிகமுக்கியமானதென மதித்து இந்நற்சமயத்தைக் கைவிடாமல் சென்றவருடம் முன்பணமீந்து ஆதரித்தது போலவே இவ்வருடமும் எப்பிரல் மாத முதலில் வெளியாகி

சகல தபாற்சிலவுகளு முட்பட ரூ-2-4-0க்கு இவ்விடமிருந்தனுப்பப்படும் உறுதி மொழிச்சீட்டடங்கிய ஹிருதயானந்தினி புத்தகத்தைப் பெற்று நமது பத்திரிகையையும் அபிமானித்து நம்மையும் பெருமைப் படுத்தி நாம் இனி செய்வதாய் நிச்சயித்திருக்கும் தேசோபகாரமான விஷயங்களுக்கும் தூண்டுகோலா யிருந்து இப்புத்தகத்தின் பெயர் இதற்கேற்றதே என்று சந்தோஷிக்கும்படியான காலத்தை எதிர் பார்க்கும்படி கோருகின்றோம்.

பத்திராதிபர்.

## பிள்ளை வளர்ப்பு.

பிள்ளைகள் சேஷ்டைகள் செய்யும் பொழுதும் சொன்ன வார்த்தைகள் கேளாத பொழுதும் பூச்சாண்டிக்குப் போட்டு விடுவேனென்று பல விதமாய் அவர்களை பயமுறுத்துவது மிகவும் அவிவேகமானது. அப்படிச்செய்வதினால் அவர்களுக்கு வாலிபத்திலேயே கோழைத்தனம் பிடிபட்டுப் பெரியவர்களான போது தைரிய குணம் குறைவாயிருக்கும். அன்றியும் அவ்வித பயத்தினால் ஒரு வேளை அவர்களுடைய சரீரத்துக்குக் கூடத் தீங்கு நேரிடும். இராத்திரி வேளைகளில் சொப்பனத்தில் பிதற்றிக்கொண்டு தூக்கத்தில் பயப்பட்டு அழுவதினால் ஆரோக்கியம் குலைந்துபோகும். பிள்ளைகளின் மேல் உறத்துச் சினந்துகொண்டு கடுமையான வார்த்தைகளைப் பேசக்கூடாது. அவை அவர்களுடைய நெஞ்சங்களில் நாராசங்கள் போலேறி வேதனை செய்யும். அவர்கள் குற்றஞ் செய்யினும், கோபித்துக்கொள்ளினும், குளிர்ந்த சொற்களினால் மன மிளகப் புத்திகள் சொல்லி ஆதரவு படுத்தவேண்டியது. வாக்கண்டனம் செய்யும் பொழுது கூட கோபத்திற்குப் பதிலாய் விசனக் குறிகளைக் காட்டவேண்டியது. குற்றஞ்செய்த பொழுது அவர்களைத்தொடைமேல் உட்கார வைத்துக்கொண்டு தமக்கு மிகவும் விசாரமா யிருக்கிறதென்றும் செவ்வையாய் நடந்துகொண்டால் எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமென்றும் சொல்லும் பட்சத்தில் அவர்கள் வெட்கப் பட்டவர்களாய் அன்புடன் தழுவிக் கொண்டு இனிமேல் இப்படித் தவறு செய்யோமென்று கூறுவார்கள். ஒரு முறை குற்றத்தை யொப்புக் கொண்டதின் மேல், எப்பொழுதும் அதையே எடுத்துச் சொல்லிக் காட்டக் கூடாது. மேலும் பத்து குற்றத்துக்கு ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்து பிற்பாடு ஒரு தடவை பக்கென்று எரிந்து விழக்கூடாது. குழந்தைகளைப் பொய் சொல்ல விடக்கூடாது. ஏதாவது வஸ்துவை யுடைத்து விட்டபொழுது அவர்கள் மேல் சினந்து கொள்ளாமல் நல்ல வார்த்தைகளுடன் குற்றத்தை யொப்புக்கொள்ளச் செய்யவேண்டியது. அப்படி ஒப்புக் கொண்ட க்ஷணமே அவர்களை யன்புடன் தடவிக் கொடுத்து முத்தமிட்டு இனிமேல் ஜாக்கிரதையாயிருக்கும்படி போதிக்கவேண்டியது. பிள்ளைகள் ஒருவரோடொருவர் சண்டை செய்யும் பொழுது அவர்களை நல்ல வார்த்தைகளுடன் அமைதிப்படுத்திக் கலகம் கூடாத காரிய மென்றும் ஒருவரை யொருவர் நேசிக்கவேண்டு மென்றும் சாந்தத்துடன் போதிக்கவேண்டியது. தப்பிதங்கள் செய்த பொழுதுகூடப் பிள்ளைகளை யடிப்பது நல்லதல்ல. சாத்தியமான வரைக்கும் நல்ல வார்த்தைகளையே பேசி நல்வழிக்குக் கொண்டுவரவேண்டியது. அடிக்கிறோம் பாரென்று யாதொரு காரணமுமில்லாமலே என்றைக்கும் அச்சுறுத்துவது கூடாது. பிள்ளைகளுக்கெதிரில்

கெட்ட வார்த்தைகளை உச்சரிக்கக் கூடாது. வேலைக்காரர்கள் கூட அப்படிப்பட்ட சொற்களை யுச்சரிக்கர்தவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது. வேலைக்காரர்கள் மூலமாய் பிள்ளைகளுக்கு அநேக துரப்பியாசங்கள் பிடிபடுகின்றன. ஆதலின் நல்லவர்களை அமர்த்திக் கொள்ளவேண்டியது அதிமுக்கியம். பிள்ளைகளுக்குக் கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்துமற்றவர்களெதிரில் சொல்லச் செய்து கொண்டாடுவது எள்ளளவும் நலமுள்ளதல்ல. (இன்னும் வரும்.) M. S.

**யுத்தம்:—** ருஷியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் யுத்தம் பலமாய் நடக்கின்றது.

**பத்திராதிபர் குறிப்புகள்:—** அடுத்த வருடத்திற்கு சந்தாதாரர்களாய் இருக்கப் பிரியப்படாதவர்கள் இம்மாதம் 22உ க்குள் தெரிவித்து விடவேண்டும். அங்ஙனம் செய்யாதவர்கள் சந்தாதாரர்களாகவே கருதப்படுவார்கள். சென்றதடவை குறிப்பிட்டபடியே 16—3—05 ல் பத்திரிகையைப் பிரசுரஞ் செய்துவிட்டோம். ஏப்பிரல்மீ தொடங்கி பிரதிமதியும் முதல் தேதியிலேயே நமது பத்திரிகை வெளிவரும். இனும் புத்தகமாகிய ஹிருதயானந்தினி, காலண்டர், உறுதி மொழிச் சீட்டு இவைகளுடன் ஏப்பிரல் மாதத்திய பிரஜாநுகூலன் பத்திரிகையையும் சேர்த்து 1—4—05 ல் V. P. P. மூலம் அனுப்பப்படுமாகலான் அதைத் தாமதமின்றி பெற்றுக் கொள்ளுமாறு நமது கையொப்ப நேயர்களை மிகவும் வேண்டிக் கொள்ளுகின்றோம். ஏப்பிரல் மாத முதல் பலவித சீர்திருத்தங்களுடனும் நவீன ஏற்பாடுகளுடனும் உயர்ந்த கடிதத்தில் அருமையான விஷயங்களை யடக்கி வெளியிடுவதுமன்றி அடிக்கடி சித்திரப் படங்களும் பிரசுரிக்கப்படும். அளிப்பதாகச் சொல்லிய மற்றொரு புத்தகம் மேமீ க்கடைசியில் அனுப்புவோம். நமது சந்தா நேயர்கள் நம்மீதும் பிரஜாநுகூலன் பத்திரிகையின் மீதும் வைத்திருக்கும் அன்பு என்னாளும் வளர்வதாக!

மங்களமஸ்து.

## கடிதங்கள்.

அடியில் வரும் கடிதம் மிகுந்த பிரக்யாதி பெற்ற ராய்பகதூர் வி. யென். நரஸிம்ஹ ஐயங்காரவர்களால் பிரஜாநுகூலன் பத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிடராகிய T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரியாரவர்களுக்கு எழுதப்பட்டது.

THE ANANDASRAM HALSURPETE
Bangalore City 26th February 1905.

மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி சாஸ்திரிகளுடைய சமுகத்திற்கு
நமஸ்கார பூர்வகமான விஞ்ஞாபனம். தாங்கள் எழுதினகடிதம் சேர்ந்தது.
மிக்க ஆவலுடன் பெற்றுக்கொண்டேன். * * * மகா-ா-ா-ஸ்ரீ வெங்கி
டாசாரியாருடைய நாவல்கள் இந்த கன்னட நாட்டில் ஜனங்களால்
மிக்க ஆதரவுடன் வாசிக்கப்படுகின்றன. அவர் அந்த புஸ்தகங்களை எழுதி
னதற்கு வெகு பிரக்யாதி வாங்கியிருக்கிறார். நன்னெறிகளைப் போதிக்
கிறதாகையால் ஜனங்களுக்கு விசேடமாக உபயோகமாயிருக்கின்றன.
இப்புஸ்தகங்களைத் தாங்கள் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் நாட்டி
ல் பரப்புவிக்க முயல்வது பரம சிலாக்கியமா யிருக்கிறது. தங்களுக்கு
தருமான காரியமாயுமிருக்கும் * * *.

(ஒப்பம்) வி. யென். நரசிம்ம ஐயங்கார்.